II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**MCOP. No. 244 of 2022**

Deposition of witness for the Petitioner / PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 13.08.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : கிருத்திகா | Caste | : |
| Father's / Husband's Name | : | Calling | : |
| Age | : | Religion | : |
| Village | : | Taluk | : |

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை—

விபத்து குறித்து நேரடியாக எனக்குத் தெரியாது என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் விபத்து நடந்தது என்று எனக்குநேரடியாக தெரியாது என்றால் சரிதான். ம.சா.ஆ.10 மேத்தா மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரியில் என் கணவரின் உடலில் வலது புறம் காயங்கள் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவரின் சம்பள சான்றிதழ் ம.சா.ஆ.20ல் வருடாந்திர போனஸ் ரூ.12,842/-என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதோடு சேர்த்து தான் மொத்த சம்பளமாக ரூ.33,995/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.19 ஆன சம்பள அறிக்கையில் 2022ல் ஜீன் மாத சம்பளம் ரூ.20,203/- என்றும் ஜீலை மாதம் ரூ.21,466/- என்றும் செப்டம்பர் மாதம் ரூ.22,633/- என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் கணவரின் மாத சம்பளம் ரூ.20 ஆயிரத்தில் இருந்து 22 ஆயிரம் மட்டுமே என்றும். அக்டோபர் மாதம் போனஸ்சோடு சேர்த்து ரூ.33,995/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நான் மனுவிற்காக தவறான தகவலை சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. என் கணவர் வருமான வரி செலுத்துபவர் அல்ல. விபத்துக்குள்ளான இருசக்கர வாகனம் என் கணவருடையது. அதற்காக ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனுடைய மோட்டார் வாகன ஆய்வறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அரசு பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான்

கோரியுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றும் மற்ற தலைப்புகளில் கோரியுள்ள இழப்பீடுகளை நான் பெற தகுதியுடையவர் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.